என்னுடைய கருத்து. ஆனால் நான் சொன்னது, நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டும் என்பதில் இன்றைக்கு அனைவரும் ஒரே நிலைக்கு வந்து இருக்கிறோம் என்பதிலே ஒத்த கருத்து இருக்கிறது. அந்தக் கருத்தை வலியுறுத்தினால் போதும் என்று தான், விவாதம் வேண்டாம், விவகாரம், பிரச்சினை வேண்டாம் மறுபடியும், பழைய நிலைகளைப் பேசிக்கொண்டு இருக்க வேண்டாம் என்பதனாலேதான் தெளிவுபடுத்தினேன்; பழைய நிலைகளைப் பேச வேண்டுமானால் மீண்டும் மீண்டும் பேசிக்கொண்டு இருக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே விவாதிக்க நான் விரும்பவில்லை. விவாதிப்பதன் காரணமாக கருத்து வேறுபாடுகள் எழுந்து நம்முடைய பிரச்சினையினுடைய மூல நோக்கத்தை முனை முறியச் செய்யவும் நான் விரும்பவில்லை. ஆனால் அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அந்தப் பட்டியலை நான் இரண்டு பேரிடத்திலும் காட்டிய போது, இந்த நிலையை என்னிடத்தில் விளக்கி இருப்பாரேயானால் அவையில் அ.தி.மு.க. எம்.பி.க்களினுடைய பெயரையும் சேர்த்து அன்றைக்குச் சொல்லி இருக்க மாட்டேன், அவ்வளவுதான்.

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் அன்றைக்கு அறிவித்த நேரத்திலே ஒன்று கேட்டார்கள். எல்லோருக்கும் விமான டிக்கெட் எடுக்கட்டுமா என்று கேட்டார்கள். நான் அப்போதே சொன்னேன், விமான டிக்கெட் வேண்டாம், அவரவர்கள் வருவார்கள் என்று சொன்னேன்.. நீங்கள் அதையே புரிந்துகொண்டு இருக்க வேண்டும்.

(ஈ) குளிர்பானங்களில் புரோமின் தாவர எண்ணெய் கலந்துள்ளதால் அவற்றைப் பருகும் மக்கள் நலம் பாதிக்கப்படுவது குறித்தும், அப்பானங்கள் விற்பனையைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலம் துவங்கிவிட்டது. கோடைக் காலத்தின் வெப்பத்தையும், கடுமையையும் தவிர்க்க சாஃப்ட் டிரிங்க்ஸ் என்று சொல்லப்படும் குளிர் பானங்களை சென்னை போன்ற நகரங்களில் மட்டுமல்லாமல் மாவட்டங்களிலும், கிராமப்புறங்களிலும் கூட அங்கு வாழ்கின்ற தமிழக மக்கள் குறிப்பாக மாணவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள் வாங்கிக் குடிக்கிறார்கள். இவ்வாறு மக்கள் பிரியமாக வாங்கிக் குடிக்கின்ற சில பிரபலமான குளிர்பானங்களில் உதாரணமாக லிம்கா, கோல்டு ஸ்பாட், கேம்பா ஆரஞ், ஸ்பிரின்ட் போன்றவைகளில் புரோமினேடட் வெஜிடபுள் ஆயில் அதாவது புரோமின்

என்ற இரசாயனம் கலக்கப்பட்ட தாவர எண்ணெய் இருப்பதாக வும் அந்த விஷ சக்தி வாய்ந்த இரசாயனம் மனித தேகத்தில் புற்று நோய் உண்டாக்கவும் மற்றும் இதயத்தின் துடிப்பை முடக்கும் சக்தியும் வாய்ந்தது என்றும் டபிள்யூ. எச்.ஓ. என்று சொல்லக்கூடிய உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து உலகத்திலே 128 நாடுகள் அந்த இரசாயனம் குளிர்பானங்களிலே பயன்படுத்துவதைத் தடை செய்து சட்டம் இயற்றி உள்ளன. அதன்பேரில் மத்திய அரசு உணவுக் கலப்படத் தடை சட்டத்தின் உதவியோடு இந்த மாதம் 13-ஆம் தேதியி லிருந்து அந்த புரோமினேடட் வெஜிடபிள் ஆயில் கலக்கப்பட்ட குளிர் பானங்களைத் தடை செய்து இருக்கிறது. அதன் அடிப் படையில் கர்நாடக மாநிலத்தில் இந்தப் பிரபலமான குளிர் பானங்களின் உற்பத்தியே நிறுத்தப்பட்டுள்ளது என்று செய்திப் பத்திரிக்கைகளிலே படித்தேன். இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு அரசு தமிழக மக்களை அந்த விஷ இரசாயனக் குளிர் பானத்தி லிருந்து பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுத்து உள்ளது என்ப தையும் அந்தக் குளிர்பானங்களின் விற்பனை அரசு மூலம் தடை செய்யப்படுமா என்பதையும் நான் மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் சு. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இந்த பி.வி.ஓ. என்று சொல்லப்படுகின்ற புரோமினேடட் தாவர எண்ணெய் கலப்பதற்கு 15-4-1990 வரை காலவரை கொடுக்கப்பட்டு இருந்தது. அது முடிந்த பிறகு அவைகளைப் பயன்படுத்தக் கூடாது என்ற ஆணையை இந்த அரசு பிறப்பித்து அவைகளைக் கட்டுப்படுத்தி இருக்கிறது. காலக் கெடு முடிந்து விட்டால் இனிமேல் பான வகை உற்பத்தி யாளர்கள் பி.வி.ஓ. எண்ணெயை பான வகை தயாரிப்பில் பயன்படுத்தக் கூடாது என்று எச்சரிக்கப்பட்டு இருக்கின்றனர். சுகாதாரம் நோய் தடுப்பு இயக்குநர், சென்னை மாநகரத்தின் சுகாதார அலுவலர் மற்றும் உணவு கலப்படத் தடைச் சட்டத்தை அமலாக்குவதில் ஈடுபட்டோர் கண்டறிந்த வகையில் சில உற்பத்தியாளர்கள் பி.வி.ஓ. எண்ணெய்க்கு மாற்றுப் பொருள் கிடைக்காததால் எலுமிச்சை, நாரத்தை, ஆரஞ்சுபழச் சுவை அடிப்படையிலான பான உற்பத்தியை 5-4-1990 முதல் நிறுத்தி விட்டனர். எனவே, பான வகை உற்பத்தியாளர்கள் இனி பானங்களைத் தயாரிக்க பி.வி.ஓ. கலக்கப்படாத பானத் தையே வாங்கிப் பயன்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக் கிறார்கள். இது தனியாக இல்லாத காரணத்தால் இதைக் கண்டறிவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அரசு இவைகளைத் தடை செய்வதற்காக நேரிடையான முயற்சி களை மேற்கொண்டு இருக்கிறது. பத்திரிக்கைகள் மூலமாகவும் விளம்பரங்கள் கொடுப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.